வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-- நாராயணசாமி

தேதி 5.6.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

மக்களவைத் தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து, மத்தியில் புதிய அரசு அமைப்பதற்கான முயற்சிகளை, அரசியல் கட்சிகள் தீவிரப்படுத்தி உள்ளன.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணித் தலைவர்கள் கூட்டம், புதுடெல்லியில் இன்று நடைபெற்றது.

எதிர்க் கட்சிகள் அடங்கிய **இண்டியா** கூட்டணியின் கூட்டமும், புதுடெல்லியில், இன்று மாலை நடைபெற உள்ளது.

நீடித்த அடிப்படையில் **பசுமையான உலகு** ஒன்றை உருவாக்க, மக்கள் அனைவரும், கூட்டாக முயல வேண்டும் என, குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

*அரசு அமைப்பு*

மக்களவைத் தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து மத்தியில் புதிய அரசு அமைப்பதற்கான முயற்சிகளை அரசியல் கட்சிகள் தீவிரப்படுத்தி உள்ளன.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, மக்களவைத் தேர்தலில் 292 இடங்களில் வெற்றி பெற்று, அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ளது. இதில் பாரதிய ஜனதா கட்சி மட்டும், 240 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. தெலுங்கு தேசம் கட்சி, 16 தொகுதிகளிலும், ஐக்கிய ஜனதா தளம், 12 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

எதிர்கட்சிகளின் இண்டியா கூட்டணி 239 தொகுதிகளில், வெற்றி பெற்றுள்ளது. இதில் காங்கிரஸ் வெற்றி பெற்ற தொகுதிகளின் எண்ணிக்கை 99. இண்டியா கூட்டணியில் சமாஜ்வாதி கட்சி 37 தொகுதிகளிலும், திரிணமுல் காங்கிரஸ் 29, மற்றும், திமுக 22 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. இதர கட்சிகள் மற்றும் சுயேட்சைகள் 18 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளனர்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, புதுடெல்லியில் இன்று பிரதமர் திரு நரேந்திர மோடியின் இல்லத்தில், மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. திரு அமித் ஷா, திரு நிதின் கட்கரி, திரு ராஜ்நாத் சிங் மற்றும் இதர அமைச்சர்கள் இதில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து பிரதமர் திரு நரேந்திர மோடி குடியரசு தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு-வை சந்தித்து, நடப்பு அமைச்சரவையின் ராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்தார்.

ராஜினாமாக் கடிதத்தை, குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொண்டு, அடுத்த அரசு அமையும் வரை காபந்து பிரதமராக நீடிக்கும் படி, திரு நரேந்திர மோடியை கேட்டுக் கொண்டார். நடப்பு 17-ஆவது மக்களவையை கலைப்பதற்கான பிரதமரின் பரிந்துரையையும், குடியரசு தலைவர் ஏற்றுக் கொண்டார். குடியரசு தலைவரைத் தொடர்ந்து, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கரையும், இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி சந்தித்தார்.

இனி புதுடெல்லியில் வரும் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள தேசிய ஜனநாயக கூட்டணி எம்பிக்களின் கூட்டத்தில் திரு நரேந்திர மோடி, பிரதமர் பதவிக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் இதைத் தொடர்ந்து, வரும் 8-ஆம் தேதி குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறும் விழாவில், திரு நரேந்திர மோடி 3-ஆவது முறையாக பிரதமர் பதவியை ஏற்பார் என்றும் தகவல் வெளியாகி உள்ளது..

இதற்கிடையே, பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணித் தலைவர்கள் கூட்டம் புதுடெல்லியில் இன்று மாலை நடைபெற்றது. பீகார் முதலமைச்சரும், ஐக்கிய ஜனதா தள தலைவருமான திரு நிதிஷ்குமார், தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் திரு சந்திரபாபு நாயுடு, லோக் ஜனசக்தி-ராம்விலாஸ் கட்சியின் தலைவர் திரு சீராக் பாஸ்வான், மற்றும், தேசிய ஜனநாயக கூட்டணியின் இதர கட்சிகளைச் சேர்ந்த

தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர். கூட்டணித் தலைவர்கள் இன்றே குடியரசு தலைவரை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோர, இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்க் கட்சிகள் அடங்கிய இண்டியா கூட்டணியின் கூட்டமும் புதுடெல்லியில் இன்று மாலை நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தமிழக முதலமைச்சரும் திமுக தலைவருமான திரு மு க ஸ்டாலின், மூத்த ஆர்ஜேடி தலைவர் திரு தேஜஸ்வி யாதவ் உள்ளிட்டோர் டெல்லி சென்றுள்ளனர்.

ஜேடியு-டிடிபி

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை முற்றிலும் ஆதரிப்பதாக ஐக்கிய ஜனதா தளம் கூறி உள்ளது. இண்டியா கூட்டணியில் இருந்து தாங்கள் வெளியேறியதற்கான காரணங்கள் இன்னும் நீடிப்பதால், மீண்டும் இண்டியா கூட்டணிக்குத் திரும்பும் பேச்சிற்கே இடமில்லை என்று, ஐக்கிய ஜனதா தளத்தின் செய்தி தொடர்பாளர் திரு கே சி தியாகி, செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். மத்தியில் ஆட்சி அமைக்கத் தேவையான எண்ணிக்கை பலம், காங்கிரஸ் கட்சிக்கோ, அல்லது இண்டியா கூட்டணிக்கோ இல்லை என்று அவர் தெரிவித்தார். பீகார் மாநிலத்தின் வளர்ச்சிக்காக தாங்கள் பீகாருக்கு சிறப்பு அந்தஸ்து கோரி வருவதாக அவர் மேலும் கூறினார்.

இதற்கிடையே, தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் திரு சந்திரபாபு நாயுடு, டெல்லிக்கு புறப்படும் முன்பாக இன்று காலை ஆந்திர மாநிலம் அமராவதியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், ஆந்திரப் பிரதேசத்தில் தெலுங்கு தேசம் கட்சிக்கு கிடைத்துள்ள தேர்தல் வெற்றிக்கு, தேசிய ஜனநாயக கூட்டணியின் கூட்டு முயற்சிகளே காரணம் என்றும், ஆந்திர மாநிலத்தின் வளர்ச்சிக்கு கட்டியம் கூறுவதாக, தேசிய ஜனநாயக கூட்டணியின் செயல்பாடுகள் அமையும் என்றும் கூறினார்.

*வெற்றி-வாழ்த்து*

மக்களவை தேர்தலில் தொடர்ந்து 3-ஆவது முறையாக வெற்றி பெற்றதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும் அவரது கட்சிக்கும், உலகத் தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர். இலங்கை அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே, பூட்டான் பிரதமர் திரு ஷெரிங் டோப்கே, மற்றும் நேபாளம், மொரீசியஸ், மாலத் தீவு, இத்தாலி உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களும் இதில் அடங்குவர்.

*முர்மு- சுற்றுச் சூழல்*

நீடித்த அடிப்படையில் பசுமையான உலகு ஒன்றை உருவாக்க மக்கள் அனைவரும் கூட்டாக முயல வேண்டும் என குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். இயற்கை வளங்களை பாதுகாக்கும் பொறுப்பு நமக்கு இருப்பதையும், நாம் இயற்கை ஆதாரங்களின் உரிமையாளர்கள் அல்ல என்பதையும் அனைவரும் புரிந்து கொள்ள

வேண்டும் என்று, சமூக ஊடகத்தில் இன்று வெளியிட்டுள்ள உலக சுற்றுச் சூழல் தின செய்தியில் அவர் கூறி உள்ளார். மனிதனுக்கும், இயற்கைக்கும் இடையிலான நல்லிணக்கமே நீடித்த வாழ்க்கைக்கு ஆதாரம் என்று, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் தமது செய்தியில் கூறி உள்ளார். இயற்கையுடன் இணைந்த வாழ்வே இந்திய நாகரீகத்தின் கலாச்சார மரபு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மோடி-சுற்றுச் சூழல்

உலக சுற்றுச் சூழல் தினத்தை ஒட்டி, புதுடெல்லியில் உள்ள புத்த ஜெயந்தி பூங்காவில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பிரதமர் திரு நரேந்திர மோடி மரக் கன்று ஒன்றை நட்டு வைத்து, நாடு முழுவதிலும் 1 கோடி மரங்களை நடுவதற்கான, **தாயின் பெயரில் ஒரு மரம்** இயக்கத்தை தொடக்கி வைத்தார். மத்திய சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ், டெல்லி துணை நிலை ஆளுநர் திரு விகே சக்சேனா உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

சுற்றுச் சூழலை அனைவரும் புரிந்து கொண்டு அதை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அவசியம் என்று புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறி உள்ளார். இன்று உலக சுற்றுச் சூழல் தினத்தை ஒட்டி, அவர் வெளியிட்டுள்ள செய்தியில், சுற்றுச் சூழலுக்கு எதிரான மனிதனின் செயல்பாடுகளால்

இயற்கையும் மனிதனின் வாழ்க்கை முறையும் பாதிக்கப்படுவதை ஒவ்வொருவரும் உணர வேண்டும் என்றார். மரங்களை நடுதல், நெகிழியை தவிர்த்தல் போன்ற சுற்றுச் சூழலுக்கு உகந்த செயல்பாடுகள் மூலமாகவே, பூமியை அடுத்த தலைமுறையினரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்க முடியும் என்று துணை நிலை ஆளுநர் மேலும் கூறி உள்ளார்.

*மகாராஷ்டிரா*

மகாராஷ்டிர மாநிலத்தில் பிஜேபி வெற்றி பெற்ற, மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை குறைந்து போனதற்கு மாநில துணை முதலமைச்சர் பதவியில் இருந்து விலக மூத்த பிஜேபி தலைவர் திரு தேவேந்திர பட்நவீஸ் முன் வந்துள்ளார். கட்சியின் மத்திய தலைமை அனுமதித்தால் துணை முதலமைச்சர் பதவியில் இருந்து விலகி, சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்திற்கு முழு நேரம் ஒதுக்க தாம் விரும்புவதாக அவர் கூறினார். மகாராஷ்டிர மாநிலத்தில் கடந்த முறை 23 மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெற்ற பிஜேபி, இம்முறை 9 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. இதற்கிடையே, துணை முதலமைச்சர் பதவியில் திரு பட்நவீஸ் நீடிக்க வேண்டுமென, கட்சியின் மத்திய தலைமையிடம் தாம் கேட்டுக் கொள்ளப் போவதாக மாநில பிஜேபி தலைவர் திரு சந்திரசேகர் பவான்குலே தெரிவித்துள்ளார்.

ஒடிசா

ஒடிசாவில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில், ஆளும் பிஜு ஜனதா தளத்திற்கு ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து முதலமைச்சர் திரு நவீன் பட்நாயக் இன்று புவனேஸ்வர் ராஜ்நிவாசில், ஆளுநர் திரு ரகுபர் தாசை சந்தித்து, ராஜினாமா கடிதம் சமர்ப்பித்தார். ஒடிசாவில் மொத்தம் உள்ள 147 சட்டமன்ற தொகுதிகளில், 78 தொகுதிகளில் பிஜேபி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அக்கட்சியின் மாநிலத் தலைவர்கள் இன்று புவனேஸ்வரில் கூடி, புதிய அரசு அமைப்பது குறித்து விவாதிக்கிறார்கள். ஒடிசா முதலமைச்சர் பதவிக்கு, மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், முன்னாள் மத்திய அமைச்சர் திரு ஜுவல் ஓராம், பாரதிய ஜனதா கட்சியின் தேசிய துணைத் தலைவர் திரு பைஜெயந்த் பாண்டா ஆகியோரின் பெயர்கள் அடிபடும் நிலையிலும், இவர்கள் அல்லாத வேறு ஒருவரிடம் முதலமைச்சர் பதவியை ஒப்படைக்க பிஜேபி மேலிடம் முடிவு செய்யலாம் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

கணக்கெடுப்பு

இந்திய ஸ்டார்ட்-அப் நிறுவனங்களும், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களும், நான்காவது தொழில் புரட்சியின் முக்கிய பகுதியான டிஜிட்டல் மாற்றங்களுக்கும், 5ஜி-6ஜி தொழில் நுட்பங்களுக்கும் தயாராக உள்ளதா என்பது குறித்து ஆராய மத்திய தொலைதொடர்புத் துறை, விரிவான கணக்கெடுப்பு ஒன்றை தொடக்கி

உள்ளது. நாட்டின் வடபகுதிகள் மற்றும் தென்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வின் அடிப்படையில், கொள்கைத் தலையீடு தொடர்பான முக்கிய பரிந்துரைகள் அரசுக்கு வழங்கப்படும் என்றும், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், இக்கணக்கெடுப்பில் பங்கேற்பதற்கான உத்தேசங்களை வரும் 11-ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கலாம் என்றும் தொலை தொடர்புத் துறை தெரிவித்துள்ளது.

*என்சிசி*

இளைய சமுதாயத்தின் எண்ணங்களை பூர்த்தி செய்வதற்கான மத்திய அரசு அறிவுறுத்தலின் படித் தற்போது அமலாகி வரும் என்சிசி விரிவாக்க திட்டத்தின் முன்னேற்றம் பற்றிய 2 நாள் மறுஆய்வு முகாம், நேற்றும்-இன்றும், புதுடெல்லியில் நடைபெற்றது. இளம் இந்தியர்களை பொறுப்பான குடிமக்களாக மேம்படுத்தும் உறுதிப் பாட்டுடன், தேசிய மாணவர் படை செயல்பட்டு வருவதாக, என்சிசி தலைமை இயக்குநர் லெப்டினென்ட் ஜென்ரல் குர்பீர்பால் சிங், நிறைவு விழாவில் பேசுகையில் கூறினார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

மக்களவைத் தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து, மத்தியில் புதிய அரசு அமைப்பதற்கான முயற்சிகளை, அரசியல் கட்சிகள் தீவிரப்படுத்தி உள்ளன.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணித் தலைவர்கள் கூட்டம், புதுடெல்லியில் இன்று நடைபெற்றது.

எதிர்க் கட்சிகள் அடங்கிய **இண்டியா** கூட்டணியின் கூட்டமும், புதுடெல்லியில், இன்று மாலை நடைபெற உள்ளது.

நீடித்த அடிப்படையில் **பசுமையான** **உலகு** ஒன்றை உருவாக்க, மக்கள் அனைவரும், கூட்டாக முயல வேண்டும் என, குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.